கூடுதல் சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.

முன்னிலை – **திரு.எம்.விக்னேஷ் பிரபு, எம்.எல்.,**
**கூடுதல் சார்பு நீதிபதி, செய்யாறு.**

2026ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள், 16ஆம் நாள் திங்கட்கிழமை

I.A.No.2/2025 in O.S.No.122/2025

1. ராணி
2. பானுப்பிரியா,
3. மோகன் (எ)மோகனகிருஷ்ணன்,
4. அன்பு,
5. தமிழ்ச்செல்வி, . . . மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. முத்துகிருஷ்ணன்,
2. அரிகிருஷ்ணன், . . . எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் 28.01.2026 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ஆனந்தன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.விஸ்வநாதன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வழக்கறிஞர்களுக்கும் போதிய வாய்ப்புக்கள் வழங்கியும் தங்களது தரப்பு வாதத்தினை எடுத்துரைக்கவில்லை மற்றும் ஆவணங்களை தாக்கல் செய்து குறியீடு செய்யவில்லை இருதரப்பிலும் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை பரிசீலனை செய்யப்பட்டு, இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் தகுதியின் அடிப்படையில் பிறப்பிக்கும் ...

## உத்தரவு

தாவா சொத்தில் எதிர்மனுதாரர்களோ/பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ அல்லது ஏஜென்ட்டுகளோ மனுதாரர்கள்/வாதிகளின் அனுபவத்தை தடைசெய்யாமல் இருக்க ஒரு இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கவேண்டி



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.16 12:03:33 +0530

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2 மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்**

மனுதாரர் இம்மனுவில் மனுதாரர் என்றும், மேற்படி தாவாவில் 1ம் வாதி என்றும், 1 ம் வாதி 2 முதல் 5 வாதிகளுக்காகவும் சேர்த்து தாக்கல் செய்கிறார் என்றும், மனு தாவா சொத்து மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும் என்றும், மனு தாவா சொத்திற்கும் பிரதிவாதிகளுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றும், மனு தாவா சொத்து தங்களைத் தவிர வேறு எவருக்கும் எந்தவித பாத்தியதையோ, உரிமையோ கிடையாது என்றும, மனு தாவா சொத்து மற்றும் இதர சொததுக்கள் காலம்சென்ற பொன்னுசாமி என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், அந்த சொத்துக்களை அவர் ஆண்டு அனுபவித்து வந்து எந்தவித ஆவணமும் எழுதிவைக்காமல் இன்டஸ்டேட்டாக இறந்துவிட்டார் என்றும், அவர் இறந்த பிறகு மனு சொத்து மற்றும் இதர சொத்துக்களை அவர் காலாந்திரத்திற்கு பிறகு அவரது மனைவி எல்லம்மாள் அவரது மகன்களான 1, 2 பிரதிவாதிகள் மற்றும் தனது கணவரும், 2 முதல் 5 வாதிகளின் தகப்பனாரும், காலஞ்சென்ற பொன்னுசாமியின் மகனுமான அரசு என்பவரும் பொன்னுசாமியின் மகளான பத்மாவதி என்பவரும் ஆண்டு அனுபவித்து வந்து அவர்களுக்குள் கடந்த 07.10.2010 தேதியிட்டு ஒரு பதிவுசெய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திர முன்னிலைக்கு (ஆவண எண்.6439/2010) A, B, C, D, E என 5 ஷெட்யூல்களக பாகம் பிரித்துக்கொண்டனர் என்றும், அவ்வாறு பாகம் பிரித்துக்கொண்டதில் மனுதாரரின் கணவரும் 2 முதல் 5 வாதிகளின் தகப்பனாருமான அரசு என்பவருக்கு C ஷெட்யூலில் கண்ட சொத்துக்கள் பாகமாக கிடைக்கப்பெற்று அரசு என்பவர் ஆண்டு அனுபவித்து வந்து கடந்த 17.09.2011 அன்று இறந்துவிட்டார் என்றும், அவருக்கு மனுதாரர்களைத் தவிர வேறு யாரும்



M VIGNESH PRABU Digitally signed by M VIGNESH PRABU Date: 2026.02.16 12:03:41 +0530

வாரிசுகள் இல்லை என்றும், பின்னிட்டு மனுதாரரின் கணவரும் 2 முதல் 5 வாதிகளின் தந்தையுமான அரசு என்பவர் இறந்துவிட்ட பிறகு அவருக்கு பாகமாக கிடைக்கப்பெற்ற சொத்துக்களை அவரது சட்டப்படி வாரிசுகள் என்ற அடிப்படையில் மனுதாரர்கள் ஆண்டு அனுபவித்து வருகின்றோம் என்றும், இந்நிலையில் மனுதாரர்கள் அனுபவித்து வரும் பாகப்பிரிவினையில் கண்ட C ஷெட்யூல் சொத்தின் ஒரு பகுதியான மனு தாவா சொத்துக்களை மனுதாரர்களை அனுபவிக்க விடாமல் பிரதிவாதிகள் வீண் தகராறு செய்து சொத்தினை அபகரிக்கும் கெட்ட எண்ணத்தில் செயல்பட்டு பிரச்சனை செய்து வந்ததால் அது சம்மந்தமாக மனுதாரர்கள் சார்பாக பிரம்மதேசம் காவல் நிலையத்தில் புகார்கள் கொடுக்கப்பட்டு காவல்நிலைய அதிகாரிகள் பிரதிவாதிகளை அழைத்து விசாரணை செய்து பிரச்சனை ஏதும் செய்யவேண்டாம் என அறிவுறுத்தி அனுப்பினார் என்றும், இருப்பினும், பிரதிவாதிகள் தொடர்ந்து பிரச்சனை செய்து வருகின்றனர் என்றும், பாகப்பிரிவினையில் கண்ட ஷெட்யூல்படி அவரவர்களுக்கு வந்த பாகத்தினை அவரவர்கள் ஆண்டு அனுபவித்து வருவதில் தங்களுக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. அதில் எந்தவித உரிமையும் கோரவில்லை என்றும், அவ்வாறு பாகப்பிரிவினையில் கண்ட C ஷெட்யூல் சொத்துக்களில் ஒரு பகுதியான மனு/தாவா சொத்துக்கள் மற்றும் பிரதிவாதிகள் அவர்களுக்கு உண்டான சொத்துக்கள் குறித்தும் பட்டா எண்.261படி பட்டா பெற்று அனுபவித்து வருகின்றனர் என்றும், அவ்வாறு கூட்டாக வழங்கப்பட்டுள்ள பட்டா எண்.261ன் கணினி நகலை கனம் கோர்ட்டில் தாக்கல் செய்துள்ளதாகவும், பின்னிட்டு மனு/தாவா சொத்தில் தாங்கள் அனுபவித்து வருவதை பிரதிவாதிகளும், அவரை சார்ந்தவர்களும் தொடர்ந்து பிரச்சனை செய்து வந்ததால் தாங்கள் கடந்த 16.05.2025 அன்று வழக்கறிஞர் மூலம்

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.16 12:03:47 +0530

பிரதிவாதிகளுக்கும், நிலஅளவையருக்கும் அறிவிப்பு அனுபபியிருந்தார் என்றும், அந்த அறிவிப்பினை பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டு இதுநாள்வரையில் எந்தவிதமான பதிலறிவிப்பும் கொடுக்கவில்லை என்றும், இருப்பினும் பிரதிவாதிகள் கடந்த 02.06.2025 அன்று மனு தாவா சொத்தில் தங்களுடைய அனுபவத்தை தடை செய்ததால் தாங்கள் ஊர் பஞ்சாயத்தார் முன்னிலையில் வெற்றிகரமாக தடுத்து நிறுத்திவிட்டதாகவும், இருப்பினும் பிரதிவாதிகள் பணபலம், படைபலம் மிக்கவர்கள் சட்டத்திற்கு கட்டுப்படாதவர்கள் என்றும், எந்த நேரத்திலும் பிரதிவாதிகளோ, அவரது ஆட்களோ ஏஜென்ட்டுகளோ தங்களின் அனுபவத்தை தடை செய்யும் அபாயம் உள்ளது என்றும், அதனால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளோ மனு/தாவா சொத்தில் தங்களுடைய அமைதியான அனுபவத்தை தடைசெய்யாமல் இருக்க வழக்கு முடியும்வரையில் ஒரு இடைக்கால தடை உத்தரவு வழங்கவேண்டி இந்த மனு தாக்கல் செய்கிறோம் என்றும், இந்த மனு அனுமதிக்கப்படவில்லை என்றால் தங்களுடைய உரிமை பாதிக்கப்படும என்றும், அதனை எந்தவிதத்திலும் ஈடுசெய்ய முடியாது என்றும், தாங்கள் வேறு வழியின்றி மனு/தாவா சொத்து தங்களுக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யக்கோரியும், மனு/தாவா சொத்தில் தங்கள் அனுபவித்து வருவதை பிரதிவாதிகளோ, அவரைச் சார்ந்தவர்களோ அவரது ஏஜென்டுகளோ தடைசெய்யாமல் இருக்க ஒரு நிரந்தரதடை உத்தரவு வழங்கக்கோரியும் தாங்கள் இத்தாவாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும், மனு/தாவா சொத்தில் எதிர்மனுதாரர்களோ/பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ அல்லது ஏஜென்ட்டுகளோ மனுதாரர்கள்/வாதிகளின் அனுபவத்தை தடைசெய்யாமல் இருக்க வேண்டி ஒரு இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்க வேண்டி மேல்முறையீட்டு மனுதாக்கல்.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.16 12:03:54 +0530

**<u>3. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையானது இம்மனுவில் எதிர்மனுதாரரால் எதிருரையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்உரையின் சுருக்கம்</u>**

வாதி தாக்கல் செய்துள்ள தாவா பொய்யும் மோசவிதமானவை என்றும், சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், மேலும் தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்றாகும் என்றும், வாதி தாக்கல் செய்துள்ள மனுவில் கண்டுள்ள சங்கதிகளில் எதிர்மனுதாரர்கள் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்றவைகளை எதிர்மனுதாரர்/பிரதிவாதி வன்மையாக மறுக்கின்றனர் என்றும், தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டதாக சொல்லுவதும், பொய்யான சங்கதிகள் என்றும், தாவா சொத்தில் 1வது அயிட்மாக குறிப்பிட்டுள்ள சித்தனக்கால் கிராம புஞ்சை சர்வே எண்.146/21-ல் 90 சென்ட் நிலமானது 1ம் வாதியின் மாமியாரான எல்லம்மாள் என்பவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தாகும் என்றும், மேற்படி சொத்தை இன்றுவரை எல்லம்மாள்தான் அனுபவித்து வருகின்றார் என்றும், தாவா சொத்தும் மற்றும் இதர சொத்துக்களும் காலம் சென்ற பொன்னுசாமி என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்பதையும், அவர் இறக்கும்வரை யாருக்கும் எழுதி வைக்காமல் இன்டஸ்டேட்டாக இறந்துவிட்டார் என்பதும் உண்மை என்றும், ஆனால் 07.10.2010ல் ஒரு பாகப்பிரிவினை பத்திரம் எழுதப்பட்டு அதில் 5 ஷெட்யூலாக பாகம் பிரித்துக்கொண்டதாகவும், அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் சி ஷெட்யூல் பாகம் அரசு என்பவருக்கு ஒதுக்கப்பட்டதாகவும், வாதி கூறுவது உண்மையல்ல என்றும், அந்த பாகப்பிரிவினை பத்திரம் மோசடியாக அரசு என்பவரால் மற்ற வாரிசுகளை ஏமாற்றி உருவாக்கப்பட்ட ஆவணமாகும் என்றும், அந்த பாகப்பிரிவினை பத்திரம் இன்றுவரை ஆச்சாரத்திற்கு வரவில்லை என்றும், அந்த பாகப்பிரிவினைப்படி சொத்துக்களை யாரும் இன்றுவரை அனுபவித்து வரவில்லை என்றும், ஏனெனில மேற்படி பொன்னுசாமி இறந்த போது அவரின்



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.16 12:03:59 +0530

வாரிசுகளுக்கு திருமணம் ஆகவில்லை என்றும், அதன் பிறகுதான் பொன்னுசாமியின் மனைவியான எல்லம்மாள் என்பவர் வாரிசுகளை வளர்த்து ஆளாக்கி அனைவருக்கும் திருமணத்தை நடத்தி வைத்தார் என்றும், கடைசியாக 2ம் பிரதிவாதியான அரிகிருஷ்ணன் என்பவருக்கு 2000–ல் திருமணம் நடந்த பிறகு அனைவரும் சேர்ந்து தந்தையார் பொன்னுசாமிக்கு பாத்தியப்பட்டிருந்த சொத்துக்ளை வாச்சாவாக பாகம் பிரித்துக்கொண்டு இன்றுவரை அவ்வாறுதான் அனுபவித்து வருகின்றோம் என்றும், பாகப்பிரிவினையில் ஏற்பட்டவாறு யாரும் அனுபவித்து வரவில்லை என்றும், மேலும் வாச்சாவாக பாகம் பிரிக்கப்பட்டு எவ்வாறு இன்றுவரை அனுபவித்து வருகிறோம் என்பதை குறிப்பிடும் வகையில் இந்த பதிலுரையுடன் ஒரு மாதிரி வரைபடத்தை இப்பிரதிவாதிகள் தாக்கல் செய்கின்றார்கள் என்றும், மாதிரி வரைப்படத்தில் குறிப்பிட்டுள்ளவாறுதான் இன்றுவரை அவரவர் பாகத்தை அனுபவித்து வருகின்றார்கள் என்றும், எனவே பாகப்பிரிவினை பத்திரம் ஆச்சாரத்திற்கு வராத காரணத்தினால் அதில் குறிப்பிட்டுள்ளவாறு அவரவர் பாக்ம அனுபவிக்கப்படாமல் இருந்து வரும் நிலையில் வாதிகள் பாகப்பிரிவினை பத்திரப்படி தாவா தொடர்ந்துள்ளது சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும், அதுவல்லாமல் வாதிகள் தாக்கல் செய்துள்ள பாகப்பிரிவினை பத்திரத்தில் உள்ளவாறு அவரவர் அனுபவித்து வந்திருந்தால் ஏன் தனித்தனி பட்டா ஏற்படுத்தப்படவில்லை என்றும், இன்றுவரை பொன்னுசாமி என்பவருக்கு பாத்தியயப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் அனைவர் பெயரிலும் கூட்டு பட்டாவாகத்தான் உள்ளது என்றும், ஆதலால் வாதிகள் தாவாவில் கோரிய பரிகாரம் தவறானதாகும் என்றும், வாதிகள் தாக்கல் செய்துள்ள பட்டா எண்.261ஆவணத்தில் அனைவர் பெயரும் கூட்டாக உள்ள நிலையில் வாதிகள் கூறுவது பொய் என்பது கோர்ட்டார் அவர்களுக்கு நன்கு புரியும் என்றும்,



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.16 12:04:07 +0530

இறந்துவிட்ட அரசு என்பவர் 2010ல் ஒரு பாகப்பிரிவினை பத்திரம் ஏற்கனவே எவ்வாறு வாச்சாவாக அனுபவித்து வருகிறோமோ அதன்படி பத்திரத்தை பதிவு செய்துக்கொள்ளலாம் என அனைவரையும் அழைத்து பிறகு மோசடியாக மற்றவர்களுக்கு தெரியாமல் அவருக்கு சாதகமாக சொத்துக்களை மாற்றிபத்திரத்தை உருவாக்கிவிட்டார் என்றும், ஆனாலும் இன்றுவரை பாகப்பிரிவினை பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளவாறு யாரும் அனுபவிக்காமல் ஏற்கனவே வாச்சாவாக பிரித்தவாறு அனுபவித்து வருவதால் வாதிகளின் தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும், இப்பிரதிவாதிகளுக்கு மேற்படி அரசு என்பவரால் மோசடியாக பாகப்பிரிவினை பத்திரம் எழுதப்பட்ட விவரம் 2022ல் தெரிந்த பிறகு வாதிகளிடம் நேரில் தெரிவித்த போது திருத்த பத்திரம் ஏற்படுத்திக்கொள்ளலாம் எனவும், தற்போது வாதிகளிடம் பண வசதி இல்லாதததினால் பிறகு ஏற்படுத்திக்கொள்ளலாம் என காலம் தாழ்த்தி வந்தனர் என்றும், பிறகு வாதிகள் கெட்ட எண்ணத்தோடு பாகப்பிரிவினை பத்திரத்தில் உள்ளவாறு தான் மாற்றி அனுபவிக்க வேண்டுமென செயல்பட்டு திருத்த பத்திரம் எழுத வரமறுத்துவிட்டு இப்பிரதிவாதிகளுக்கு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றும், பின்னர் இப்பிரதிவாதிகள் ஊர் முக்கியஸ்தர்களை அழைத்துக்கொண்டு வாதிகளிடம் நேரில் முறையிட்ட போது திருத்த பத்திரம் எழுதிக்கொள்ளலாம் என ஒரு 6மாதங்கள் காத்திருக்கும்படி சொன்னதினால் இப்பிரதிவாதிகளும் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றும், அதற்கு பிறகு வாதிகள் இந்த பொய்யான தாவாவை நீதிமன்றத்தில் தொடர்ந்துவிட்டதினால் இப்பிரவிதாதிகளால் பதில் அறிவிப்பு கொடுக்க முடியவில்லை என்றும், மேற்கூறிய காரணம் தெய்வாதீனமானது என்றும், உண்மையில் இப்பிரதிவாதிகள் பதிலுரையுடன் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்தில் உள்ளவாறுதான் அவரவர் பாகத்தை அனுபவித்து வருவது ஊரில்

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.16 12:04:13 +0530

கிராமத்தில் உள்ள அனைவருக்கும் நன்கு தெரியும் என்றும், வாதிகள் மோசடியாக ஏற்படுத்தப்பட்ட ஆச்சாரத்திற்கு வராத பாகப்பரிவினை பத்திரப்படி இத்தாவாவில் வாதிகள் கோரும் பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், வாதிகளின் தாவா முதல் நிலையிலேயே தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும், வாதிகளின் தாவா பொய்யானது எனவும், நிலைக்கத்தக்கதல்ல எனவும் தீர்மானித்து இப்பிரதிவாதிகளின் செலவுத்துதொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு இப்பிரதிவாதிகளின் பரம் எதிர்உரை தாக்கல்.

4. இந்த மனு சம்மந்தமாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சினை என்னவென்றால், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா ? என்பதேயாகும்.

6. தீர்வு : இரு தரப்பிற்கும் போதிய வாய்ப்புகள் வழங்கியும் இருதரப்பிலும் வாதங்கள் முன்வைக்கவில்லை. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை மற்றும் வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் ஆகியவை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர்கள் இவ்வழக்கின் வாதிகளும், எதிர்மனுதாரர்கள் பிரதிவாதிகளும் ஆவார்கள். மனுதாரர்கள் வாதிகளாக இருந்து பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு சொத்தைப் பொருத்து விளம்புகை மற்றும் நிரந்தரதடை உறுத்துக்கட்டளை பிறப்பிக்கவேண்டியும் மற்றும் இதர



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.16 12:04:21 +0530

பரிகாரங்களுக்காக அசல் வழக்கினை தாக்கல் செய்து அதில் பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு 28.01.2026ம் தேதியன்று எழுவினாக்கள் வனையப்பட்டு வாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்காக அசல் வழக்கானது நிலுவையில் இருந்து வருகிறது.

7. மனுதாரர்கள் தன் மனுவில் தெரிவித்துள்ள சங்கதிகளை நிருபிக்கும் வண்ணம் எந்தவொரு ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்தானது மனுதாரர்கள்/வாதிகளுக்கு உரிமையானதா இல்லையா என்பதைப் பொறுத்தும், அச்சொத்தானது வாதிகளின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறதா என்பதைப் பொறுத்தும், இருதரப்பிலும் சமர்பிக்கப்படும் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை கொண்டு தான் தீர்மானிக்க முடியும் என்பதாலும், தற்சமயம் முழு விசாரணையின்றி இந்நீதிமன்றத்தால் முடிவு காண இயலாது. மேலும் அசல் வழக்கானது இந்நீதிமன்றத்தில் வாதிகள் தரப்பு சாட்சியத்திற்காக நிலுவையில் இருந்து வருவதாலும், வாதிகள் தரப்பும் அசல் வழக்கினை நடத்துவதற்கு தயாராக உள்ளதாலும், மனுதாரர்களின் மனுவினை அனுமதிப்பதற்கு முதல்தோற்ற வழக்கும், சமச்சீர் வாய்ப்பும் இல்லை என்பதாலும், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது நீதியின் நலன்கருதி தகுதியின் அடிப்படையில் தள்ளுபடி செய்யப்படுகிறது.

இறுதியாக, மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது செலவுத் தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால்

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.16 12:04:28 +0530

பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025 ஆண்டு பிப்ரவரி திங்கள் 16ம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.16 12:04:34 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றவணங்கள்</u>
இல்லை
<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றவணங்கள்</u>
இல்லை

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.16 12:04:39 +0530

கூடுதல் சார்பு நீதிபதி
செய்யாறு.